

# செயின்ட் ஜோசப் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, ஓசூர்

# தமிழ்த்துறை

## கையேடு & செய்திமடல்

2022-2023



# இயற்கையுடன் தொடர்பு

**“அவர் மூலமாகவே அனைத்தும் உண்டாயின,**

**அவர் இல்லாமல் எதுவும் இல்லை” (யோவான் 1:3)**

இறைவனின் அழகான படைப்புகளில் இயற்கையும் ஒன்று. இயற்கையின் வழியாக கடவுள், நமக்கு கற்பிக்கவும், நம்மிடம் பேசவும், நமக்காக வழங்கவும் முடியும். இந்த காரணத்திற்காக மனிதர்களாகிய நாம் கடவுள் படைத்த அனைத்தையும் பாதுகாத்தல் அவசியமாகும். மனிதர்கள் இயற்கையின் பிரிக்கமுடியாத அங்கம். ஆகவே இயற்கையைச் சேதப்படுத்தாமல் இருக்கவேண்டும். மனிதர்களும் இயற்கையும் நிலையான வளர்ச்சிக்கான கவலைகளின் மையத்தில் உள்ளன. ஆரோக்கியமான வாழ்வுக்கான உரிமை மனிதர்களுக்கு மட்டுமல்ல, மனிதர்கள் உட்பட அனைத்து உயிரினங்களுக்கும் உயிர் வாழ்வதற்கான, அடிப்படையான இயற்கைக்கும் உரிமை உண்டு. இயற்கை என்பது சுரண்டப்படக் கூடிய, மாற்றியமைக்க, தனியார் மையமாக்கப்படக்கூடிய வளங்களின் தொகுப்பு அல்ல. பூமி மட்டுமே நமக்கிருக்கும் ஒரே வீடு மற்றும் வாழ்க்கையின் ஆதாரம். அது நமக்கு சொந்தமானது அல்ல நாம் பூமிக்கச் சொந்தமானவர்கள். நமது தேசத்தின் தந்தை மகாத்மா காந்தி நமது பூமியின் அபரிமிதமான இயற்கை வளங்கள் மனித குலத்தின் தேவைகளை பூர்த்தி செய்ய முடியும், ஆனால் பேராசையால் அல்ல என்பதை எடுத்துரைத்தார். முனித அமைப்புகளுக்கும், இயற்கை அமைப்புகளுக்கும் இடையிலான சமநிலையை மீட்டெடுப்பதற்கான நமது உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துவது மிகவும் முக்கியமானது, இதன் மூலம் நமக்கு முக்கியமான சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கு நாம் செய்யும் சேதத்தை நிறுத்த முடியும். மாசு மற்றும் காடுகளை அழிப்பதன் மூலம் இயற்கையையும் அதன் அமைப்பையும் பாதிக்கும் போது, மனித இனம் தலைமுறை தலைமுறையாக வருந்த வேண்டிய கட்டாயத்தில் இருக்கும். இயற்கைக்கு எதிரானவர்கள் நிலநடுக்கம், சுனாமி, வறட்சி முதலானவை வாழ்க்கை முறையில் மாற்றங்களை நிகழ்த்துவன. ஆகவே, பூமியைப் பாதுக்காக்க வேண்டிய கடமை நம்மிடையே உள்ளது. சமீபத்தில் கோவிட் ‘19’ தொற்றுநோய் பொது சுகாதாரத்திற்கு ஒரு பெரிய அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளது மற்றும் உலகளாவிய உணவு விநியோக அமைப்புகளுக்கு போர் மோதல்கள் உலகம் இதுவரை கண்டிராது. இத்தகைய விளைவுகள் இயற்கையைச் சேதப்படுத்துவதால் உண்டாவன. இனிவரும் காலங்களில் இயற்கையுடன் நல்ல முறையில் தொடர்புக் கொண்டு வாழ்வோமாக..

## எமது கல்லூரி

**கல்லூரியின் பெயர்: செயின்ட் ஜோசப் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி**

**முகவரி** : மூக்கண்டப்பள்ளி, சிப்காட், ஓசூர்- 635126 கிருஷ்ணகிரி(மாவட்டம்).

**தொடர்பு எண்** : 04344-274453, 9894905338, 9952617242

**தொலை நகல் எண்** : 04344-274453

**மின்னஞ்சல்** : stjoseph.college10@gmail.com

**இணையம்** : www.stjosephcollege.edu.in

**செயலர்** :**அருட்சகோதரி** மேரி லூசி ஜீலியட் **M.Sc., M. Phil.,M.Ed.,**

**முதல்வர்** **:அருட்சகோதரி முனைவர் ம.ஹெலன் M.Sc., M. Phil., Ph. D.,**

**கல்லூரி நிறுவப்பட்ட ஆண்டு:** 2006 ஆம் ஆண்டு செயின்ட் ஜோசப் பெண்களுக்கான கலை மற்றும் அறிவியல் கல்லூரி கிருஷ்ணகிரி மாவட்டம் சிப்காட்,ஓசூர் மூக்கண்டப்பள்ளியில் நிறுவப்பட்டுள்ளது. மற்றும் பிரான்சிஸ்கன் காணிக்கை அன்னை சபை சகோதரிகளால் நிர்வகிக்கப்பட்டுவருகிறது. இக்கல்லூரியானது சேலத்தில் உள்ள பெரியார் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டு 25 அக்டோபர் 2006 முதல் செயல்படத் தொடங்கியது.

கல்லூரியில் அனைத்து சாதி மற்றும் மதத்தைச் சேர்ந்த மாணவர்களைச் சேர்க்கப்பட்டு வருகிறது. தங்கும் விடுதி மற்றும் பேருந்து வசதிகள் உள்ளன. கல்லூரி மற்றும் விடுதியில் சேர்க்கைக்கான விண்ணப்பம் பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் பதிவு செய்யப்பட வேண்டும்.

**கொள்கை (Policy)**

- இயற்கையைப் பாதுகாப்பது ஒவ்வொரு தனிமனிதனின் தலையாய கடமை, ஆரோக்கிய வாழ்வுக்கான உரிமை.
- மனித அமைப்புகளுக்கும், இயற்கை அமைப்புகளுக்கும் இடையிலான சமநிலையை மீட்டெடுப்பது.
- மனித இனம் ஒரு போதும் இயற்கைக்கு எதிரானவர்கள் அல்ல.
- சுற்றுச்சூழல் பேரழிவில் இருந்து பூமியைப் பாதுகாப்பது.
- உலகளாவிய உணவு விநியோக விழிப்புணர்வு உருவாக்குதல்
- இயற்கையை தனியார்மயம் மற்றும் வணிகமயமாக்கத்திலிருந்து மீட்டெடுத்தல்.

**நோக்கம் (Motto)**

அறிவு தூய்மைப்படுத்துகிறது

அறத்தை மேம்படுத்துகிறது

**பார்வை (Vision)**

பொறுப்புள்ள குடியுரிமையும் பயனுள்ள அறிவுச்சார்ந்த சமூகத்தையும் சுற்றுச்சூழலுக்கேற்ப மாற்றங்களை ஊக்குவிக்கும் தார்மீக விழுமியங்களால் வலுப்படுத்தப்பட்ட ஒரு மாறும் கற்றல் சமூகத்தை உருவாக்குவதற்கான பார்வை.

பணி (**Mission**)

- ❖ புதுமையான கல்வியை வழங்குதல்
- ❖ அறிவுச்சார்ந்த தனிப்பட்ட மற்றும் ஆன்மிக வளர்ச்சியை வளர்த்தல்
- ❖ சமூகப் பொறுப்பை ஊக்குவித்தல்
- ❖ சுற்றுச்சூழல் விழிப்புணர்வை வளர்த்தல்



**துறைத்தலைவர்**

**முனைவர் பு.எழிலரசி M.A., M.Phil.,B.Ed.,Ph.D.,SET.,**

**துறைப்பேராசிரியர்கள்**

**திருமதி சி.ஹேமலதா M.A., M.Phil.,B.Ed.,SET.,(Ph.D)**

**திருமதி ஈ.கவிதா M.A., M.Phil.,(Ph.D)**

**திருமதி ந.கனிமொழி M.A., B.Ed., M.Phil.,NET.,**

**முனைவர் பெ. சங்குவதி M.A.,NET., SET., M.Phil. Ph.D.**

**முனைவர் சே.கீதா M.A., M.Phil., Ph.D.**

**நிகழ்ச்சி நிரல்கள்**

ஆகஸ்ட் மாதம் 18 இல் விடியல் கலை இலக்கிய மன்றம் சார்பாக மதுரையில் நடைப்பெற்ற கவிதை,கையெழுத்துப் போட்டிகளில் நமது கல்லூரியைச் சேர்ந்த மாணவிகள் பங்கேற்றனர்.

செப்டம்பர் 14 இல் பெரியாரை வாசிப்போம் என்ற பெருந்திரள் வாசிப்பு நிகழ்ச்சி நமது கல்லூரி முதல்வர் அருட்சகோதரி முனைவர் ம.ஹெலன் மற்றும் செயலர் மேரி லூசி ஜீலியட் அவர்கள் முன்னிலையில் நடைப்பெற்றது.

**பிற கல்லூரி பேச்சுப்போட்டி மற்றும் கவிதை போட்டிகள்**

செப்டம்பர் 20 இல் நமது கல்லூரியைச் சேர்ந்த மாணவிகள் திருப்பத்தூரிலுள்ள தூய நெஞ்சு கல்லூயில் நடைப்பெற்ற பேச்சுப்போட்டி மற்றும் கவிதை போட்டிகளில் அபிநயா இரண்டாமாண்டு கணினி அறிவியல் துறை, பீரித்தா இரண்டாமாண்டு ஆங்கிலத்துறை மாணவிகள் கலந்துக்கொண்டனர்.







**இலக்கிய மன்ற விழா**

அகத்தியர் தமிழ் இலக்கிய மன்றத்தின் சார்பாக 21.09.2022 அன்று இலக்கிய மன்ற விழா இறை வணக்கத்துடன் இனிதே துவங்கியது. மாணவி கனகதாரா இரண்டாமாண்டு கணிதத்துறை வரவேற்புரை கூற, கல்லூரியின் முதல்வா் முனைவா் அருட்சகோதரி ம.ஹெலன், மற்றும் செயலா் அருட்சகோதரி மேரி லூசி ஜீலியட் அவா்கள் வாழ்த்துரை வழங்க, தமிழ்த்துறைத் தலைவா் முனைவா் பு.எழிலரசி முன்னிலை வகித்தாா். இவ்விழாவில் கல்லூரி பேராசிரியா்கள் மற்றும் மாணவிகள் கலந்துக் கொண்டனா்.

இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராக முனைவா்.த.தனராசு உதவிப்பேராசிரியாா் அரசு கலைக் கல்லூரி கிருட்டினகிரி அவா்கள், கலந்துக்கொண்டு,சிறப்புரை வழங்கியும், மனிதரின் செயல் விலங்குகளுக்கு சாதகமா? பாதகமா? ஏன்ற தலைப்பின் பட்டிமன்றத்திற்கு நடுவராக இருந்து மனிதரின் செயல் விலங்குகளுக்கு பாதகமே என்று தீா்ப்பு வழங்கி விழாவைச் சிறப்பித்தாா். இந்நிகழ்ச்சியின் இறுதியாக நன்றியுரையை மாணவி அம்ரின் முதலாமாண்டு ஊட்டசத்துத்துறை வழங்க தேசிய கீதத்துடன் இவ்விழா இனிதே நிறைவடைந்தது.


GPS Map Camera
AGAR
ondapalli
Google
Hosur, Tamil Nadu, India
Grapes Garden Mookandapalli, Hosur, Tamil Nadu 635126, India
Lat 12.748301°
Long 77.806835°
21/09/22 10:37 AM GMT +05:30


GPS Map Camera
dapalli
Google
Hosur, Tamil Nadu, India
Near TK hotel.mookandapalli, PRX4+9W3, Hosur, Tamil Nadu 635126, India
Lat 12.74839°
Long 77.807299°
21/09/22 11:31 AM GMT +05:30




**அப்துல்காலம் நினைவு நாள் கட்டுரைப் போட்டி**

அக்டோபர் 16 ஆம் நாளில் அப்துல்காலம் நினைவு நாளை முன்னிட்டு மாணவர்களுக்கு கட்டுரைப் போட்டி தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் பு.எழிலரசி முன்னிலை நடைப்பெற்றது. இப்போட்டியில் பெரும்பாலான மாணவிகள் கலந்துக்கொண்டனர்.

**சிறுதானிய விழிப்புணர்வு போட்டிகள்**

பிப்ரவரி 11இல் சிறுதானிய உணவு விழிப்புணர்வு குறித்து பேச்சுப்போட்டி மற்றும் ஓவியப்போட்டி நடைப்பெற்றன. இப்போட்டிகளுக்கு தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் பு.எழிலரசி தலைமைத் தாங்கினார். பேச்சுப்போட்டிக்கு நடுவராக பொருளியல் துறை உதவிப்பேராசிரியர் திருமதி அ.வியானி ஜெனிட்டா மேரி அவர்களும், ஓவியப்போட்டிக்கு இயற்பியல் துறை உதவிப்பேராசிரியர் திருமதி ம.வினிதா அவர்கள் பங்கேற்றனர்.

**பேச்சுப்போட்டி**

முதல் பரிசு : ம. பவித்ரா மூன்றாமாண்டு ஆங்கிலம்

இரண்டாம் பரிசு : ஹேமா இரண்டாமாண்டு கணினி அறிவியல் துறை

மூன்றாம் பரிசு : பிரியா முதலாமாண்டு கணினி பயன்பாடு துறை

**ஓவியப்போட்டி**

முதல் பரிசு : ஸ்ரீ.ஸ்வேதா மூன்றாமாண்டு வணிகவியல் துறை


இரண்டாம் பரிசு : ச. சபரி முதலாமாண்டு கணினி பயன்பாடு துறை

மூன்றாம் பரிசு : செ.தேவிப்பிரியா முதுகலை வணிகவியல் துறை



**சாதனையாளன் திரைப்படம்**

மார்ச் 4இல் சாதனையாளன் என்ற தலைப்பின் கீழ் “நீரின்றியமையாது உலகு” என்ற பொருண்மையில் திரைப்படம் காண்பிக்கப்பட்டது.




**மாபெரும் தமிழ் கனவு**

மார்ச் 17 ஆம் நாள் தமிழ்நாடு அரசும் தமிழ்த்துறையும் இணைந்து நடத்திய “மாபெரும் தமிழ் கனவு” என்ற தமிழ் கலாச்சார பண்பாடு குறித்த விழிப்புணர்வு சொற்பொழிவு நடைப்பெற்றது. இக்கருத்தரங்கிற்கு சிறப்பு விருந்தினராக திருமதி சரண்யா(இ.ஆ.ப), கலந்துக்கொண்டனர். சிறப்பு பேச்சாளர்களாக செல்வி.ஆண்டாள் பிரியதர்சினி அவர்கள்

“கல்லூரிக்கு வெளியே கல்வி” என்ற தலைப்பிலும். திரு. சமஸ் அவர்கள் “தமிழ் பண்பாடு” என்ற தலைப்பிலும் சொற்பொழிவு ஆற்றினர். தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் பு.எழிலரசி அவர்கள் நன்றியுரை வழங்க கருத்தரங்கு இனிதே நிறைவுற்றது.



கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் செயின்ட் ஜோசப் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் "மாபெரும் தமிழ்க் கனவு" சொற்பொழிவு நிகழ்ச்சியை ஓசூர் சார் ஆட்சியர் திருமதி.ஆர்.சரண்யா இ.ஆ.ப., அவர்கள் இன்று (17.03.2023) துவக்கி வைத்தார். உடன் எழுத்தாளர் திருமிகு.ஆண்டாள் பிரிதர்ஷினி, ஊடகவியலாளர் திருமிகு.சமஸ், கல்லூரி முதல்வர் அருட் சகோதரி டாக்டர் ஹெலன் ஆகியோர் உள்ளனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் செயின்ட் ஜோசப் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் "மாபெரும் தமிழ்க் கனவு" சொற்பொழிவு நிகழ்ச்சியில் தமிழ்ப்பெருமிதம் குறித்தும், கேள்வி பதிலில் கலந்து கொண்ட கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு பாராட்டுச்சான்றிதழ்களை மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.சுகுமார், எழுத்தாளர் திருமிகு.ஆண்டாள் பிரிதர்ஷினி ஊடகவியலாளர் திருமிகு.சமஸ் ஆகியோர் இன்று (17.03.2023) வழங்கினார்கள்.

**தாட்கோ பயிற்சி வகுப்புகள்**

அரசு இலவசமாக நடத்தும் தாட்கோ திட்டத்தின் மூலம் தமிழ்த்துறை மற்றும் வரண்டா ரேஸ் பயிற்சியகம் இணைந்து வங்கிப்பணிக்கான பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. இப்பயிற்சி வகுப்புகளில் எம் கல்லூரியைச் சேர்ந்த 30க்கும் மேற்பட்ட மாணவிகள் கலந்துக்கொண்டனர்.




51, Chandapura - Anekal Road, Byagadadenahalli, Tamil Nadu 562107, India
Byagadadenahalli
Tamil Nadu
India
2023-03-02(Thu) 01:57(pm)
28°C
82°F
Google